**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்!



கோதை ஜோதிலட்சுமி

பாரத வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மக்களின் ஏகோபித்த பாராட்டுக்கு உரியவராக இருக்கிறார். ஜி20 மாநாட்டு வெற்றியால் அவரை தேசமே கொண்டாடியது. அவரது அசாதாரணமான உழைப்பு, இக்கட்டான சூழ்நிலையில் அவர் காட்டும் ராஜதந்திரம் கண்டு உலக நாடுகளின் தலைவர்களே வியக்கிறார்கள். தற்போது அவருக்கு சவாலான மற்றொரு சிக்கல் எழுந்துள்ளது.

இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகள் எட்டு பேருக்கு கத்தாரில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலுக்காக உளவு பார்த்தார்கள் என்பது அவர்கள் மீதான குற்றச்சாட்டு. இந்தச் செய்தி அதிர்ச்சி அளிப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்தது. அந்த அதிகாரிகளின் குடும்பத்தினரை நமது வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்தார்.

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள எட்டு பேரின் விடுதலைக்கும் சட்டப்படியான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார். அவரது முயற்சியால், இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதித்துள்ள கத்தார் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கத்தார் இந்தியாவின் நட்பு நாடுதான். என்றாலும் கத்தாரின் செயல்பாடுகளை, கொள்கைகளை நாம் பார்க்க வேண்டும். பாகிஸ்தானுக்கு ஆதரவாகவும், அந்நாட்டோடு நட்புடனும் கத்தார் இருக்கிறது. அமெரிக்காவுடனும் கத்தாருக்கு உறவு இருக்கிறது. சொல்லப்போனால் அமெரிக்காவின் அதிகாரம் கத்தாரில் செல்லுபடியாகும். கத்தாரில் கடற்படைத் தளம் அமைத்திருக்கிறது அமெரிக்கா.

அரபு நாடுகளில் கத்தார், துருக்கி, ஈரான் போன்ற நாடுகள் ஹமாஸ் பக்கம் நிற்கின்றன. ஹமாஸுக்கு ஆதரவாக கத்தார் நிற்கிறது. இஸ்ரேலுடன் அதற்கு நல்லுறவு இல்லை. இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான யுத்தத்தில் இந்தியா இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

ஹமாஸுக்கு நிதி அளித்து உதவக்கூடிய நாடாகவும் கத்தார் இருக்கிறது. கத்தார் எண்ணெய் வளம் கொண்ட நாடு என்பதால் செல்வம் கொழிக்கும் நாடு. ஏறத்தாழ 30 லட்சம் மக்கள்தொகை கொண்ட மிகச் சிறிய நாடுதான். அதிலும் 85 % மக்கள் வெளிநாடுகளிலிருந்து வேலைக்காக வந்து குடியேறியவர்கள். பொருளாதாரத்தில் வலிமையாக இருப்பதால் கவனமுடன் அணுகப்பட வேண்டிய நாடு.

இஸ்ரேல் யுத்தத்திற்கும் இந்த எட்டு பேர் மீதான குற்றச்சாட்டுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறமுடியாது. ஏனெனில், முன்னாள் கடற்படை அதிகாரிகள் எழுபேரும் ஒரு மாலுமியும் கத்தாரில் உள்ள ஒரு தனியார் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த போது (கடந்த ஆண்டு அக்டோபர் மாதம்) கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு கடந்த ஓர் ஆண்டாக நடந்து வந்திருக்கிறது. ஆனால், இவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனைக்கும் யுத்தத்திற்கும் தொடர்பு இல்லை என்று சொல்ல முடியாது.

குறிப்பாக, இஸ்ரேல் பக்கம் நிற்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை கத்தார் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடாக இந்த தண்டனை இருக்கலாம். நட்புறவு கொண்ட நாடு இப்படிப்பட்ட தண்டனையை வழங்கியதில் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அந்த அளவுக்கு இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் முக்கியமானதா என்ற கேள்வியும் எழலாம். ஆம், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்கா உட்பட பல நாடுகளின் தேர்தல்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய யுத்தமாக இது இருப்பதால் சர்வதேச அரசியலின் களமாக மாறியுள்ளது.

இதனை இந்தியா எப்படி எதிர்கொள்ளப்போகிறது? எட்டு பேரின் விடுதலை எளிதானதா? சட்டப் போராட்டம் வெற்றி பெறுமா? இதனால் கத்தார், இந்தியா உறவில் விரிசல் ஏற்படுமா? அந்த விரிசல் பொருளாதாரத்தைப் பாதிக்குமா? கத்தாரில் இருக்கும் இந்தியர்களுக்கு இதனால் சிக்கல் தோன்றுமா?

இந்த பிரச்னையைக் கையாளும் பொறுப்பு தேர்ந்த அதிகாரியான தீபக் மிட்டலுக்குத் தரப்பட்டிருக்கிறது. கத்தாருக்கான இந்தியத் தூதராகப் பணியாற்றியவர் என்பதால் இந்த விஷயத்தில் அவரது அணுகுமுறை பலனளிக்கக்கூடும். பாகிஸ்தானால் சிறைபிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட குல்பூஷண் ஜாதவின் வழக்கை சர்வதேச நீதிமன்றத்தில் நடத்திய அனுபவம் அவருக்கு இருக்கிறது.

இந்தியா - கத்தார் உறவு பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது. இந்தியாவின் எரிபொருள் தேவையில் சுமார் 40%-ஐ கத்தார்தான் வழங்குகிறது. ஏறத்தாழ ஏழு லட்சம் இந்தியர்கள் கத்தாரில் பணியாற்றுகின்றனர். அதோடு முதலீடுகளும் கணிசமான அளவில் செய்யப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் இருதரப்புக்குமே முக்கியம். எனவே, கடுமையாக நடந்து கொள்வதைப் பற்றி சிந்திக்க வேண்டிய இடத்தில்தான் கத்தாரும் இருக்கும்.

இந்திய அரசின் துணையுடன் அந்த எட்டு பேரின் சட்டப்போராட்டம் என்பது அவர்களுக்கு பலம் அளிக்கக்கூடியது. எட்டு இந்தியர்களின் மரண தண்டனை அந்நாட்டின் கீழமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. இத்தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதில் நீதி கிடைப்பதற்கான சாத்தியம் இருக்கிறது. அப்படி இல்லாமல் போகும் பட்சத்தில் சர்வதேச நீதிமன்றத்தை அணுகலாம். ஆக, நீண்ட சட்டப்போராட்டத்திற்கான வாய்ப்பு இருக்கிறது. இதுவே ஆறுதலான செய்திதான்.

எட்டுப் பேரும் சாமானியர்கள் அல்ல. இந்திய கப்பற்படையில் பணியாற்றி ஓய்வு பெற்ற கேப்டன் நவ்தேஜ் சிங் கில், கேப்டன் சௌரவ் வசிஷ்ட், கமாண்டர் பூர்ணேந்து திவாரி, கமாண்டர் வீரேந்திர குமார் வர்மா, கமாண்டர் அமித் நாக்பால், கமாண்டர் சஞ்சீவ் குப்தா ஆகியோரும் கடற்படை வீரர் ராகேஷ் கோபகுமாரும்தான் கைது செய்யப்பட்டவர்கள்.

கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் நான்கு மாதம் கொடுமையை அனுபவித்த நிலையில், இந்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் சட்டப்படியான நடவடிக்கை தொடங்கியது. இந்திய அதிகாரிகள் அவர்களை சந்திக்கவும் செய்தனர்.

**இஸ்ரேல் பக்கம் நிற்கும் இந்தியாவின் நிலைப்பாட்டை கத்தார் விரும்பவில்லை என்பதன் வெளிப்பாடாக இந்த தண்டனை இருக்கலாம். நட்புறவு கொண்ட நாடு இப்படிப்பட்ட தண்டனையை வழங்கியதில் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ள வேண்டும்.**

அதே நேரத்தில் நாடாளுமன்றத்திலும் இவர்கள் நிலை குறித்து கேள்வி எழுந்தது. அப்போது வெளியுறவுத்துறை அமைச்சர், பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகப் பதிலளித்தார். இதனால், ஆரம்பம் முதலே இந்த பிரச்னையில் வெளியுறவுத்துறை கவனம் செலுத்தி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

சட்ட நடவடிக்கைகளுக்கும் பலன் ஏற்படாவிட்டால் கத்தார் அரசு மன்னிப்பு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்திய அரசு முன்வைக்கலாம். கத்தார் குடியரசு நாடு அல்ல, மன்னராட்சி நடைபெறும் நாடு என்பதால் மன்னர் விரும்பினால் கைதிகளாக இருப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய முடியும்.

கத்தார் நாட்டின் இந்த எட்டு பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டால் அது இருநாட்டு உறவில் விரும்பத்தகாத பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை அரசரான ஷேக் தமிம் பின் ஹமத் அல் தனி யோசிக்கவே செய்வார். அதனால் நீதிமன்றத்திலேயே இவர்களின் தண்டனை குறைக்கப்படுவதற்கான வாய்ப்பும் உண்டு. அந்த வாய்ப்பு ஏற்பட்டால், கைதிகளை பரிமாற்றிக் கொள்ளும் ஒப்பந்தத்தை இந்தியா கத்தாருடன் ஏற்கெனவே மேற்கொண்டிருப்பதால் நிலைமை சுலபமாகலாம்.

இந்த எட்டுப் பேரும் இந்திய ராணுவத்தில் பெரும் பதவிகளில் இருந்தவர்கள். அவர்கள் ஏன் வெளிநாட்டில் வேலைக்குச் சென்றார்கள் என்பது பொதுமக்கள் மனதில் எழும் கேள்வி. கத்தாரில் செல்வம் நிறைந்திருக்கிறது. ஆனால், மனித வளம் மிகக்குறைவு. தங்கள் வளர்ச்சிப் பணிகளுக்கு வெளிநாடுகளில் இருந்தே மனித வளத்தை நம்பி இருக்கின்றனர். கத்தாரின் மக்கள்தொகையில் ஏறத்தாழ 18% பேர் இந்தியர்கள்.

கட்டுமானப் பணியில் இந்தியர்கள் அதிக அளவில் பணியாற்றுகின்றனர். மேற்கொண்டு தங்கள் செல்வத்தை முதலீடு செய்வதும் பல துறைகளில் தன்னிறைவு காணவும் கத்தார் முயற்சி செய்கிறது. விளையாட்டு மற்றும் பாதுகாப்புத் துறைகளில் ஆர்வம் காட்டுகின்றனர்.

உலகக் கால்பந்துப் போட்டியான ஃபிபா போட்டிகளில், கப்பல் கட்டுதல், குறிப்பாக நீர்மூழ்கிக்கப்பல் கட்டுமானத்தில் கவனம் செலுத்துகிறது. இதனால் தொழில்நுட்ப நிபுணர்களை வரவேற்கிறது.

ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குவது, மேலாண்மை செய்வது போன்ற நிலைகளில் அனுபவம் உள்ள வெளிநாட்டினரை இவர்கள் பணியில் அமர்த்திக் கொள்கின்றனர். சில நிறுவனங்களில் முழுவதுமாக இந்தியர்களே பணியாற்றும் நிலையும் இருக்கிறது. அப்படியான ஒரு நிறுவனத்தில்தான் எட்டு பேரும் ஆலோசகர்களாகப் பணியாற்றியுள்ளனர்.

கத்தாரைப் பொறுத்தவரை அது ஹமாஸுக்கு மட்டுமல்ல, பல தீவிரவாத அமைப்புகளுக்கும் ஆதரவு தரும் நாடு. தலிபான்களுக்கு பலம் அளித்த நாடு. அல்-காய்தா போன்ற தீவிரவாத இயக்கத் தலைவர்கள் சொகுசாக வாழ இடம் அளித்த நாடு. இதனால் வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பே கத்தாரை தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக்கும் நாடு என விலக்கி வைத்திருந்தது. தலிபான்களையும் வளர்க்கும், அமெரிக்காவுடனும் நட்பு பாராட்டும் இரட்டை முகம் காட்டும் தேசம் அது.

மருந்துப் பொருள், உணவு உட்பட பல துறைகளில் இந்தியாவை நம்பி இருக்கிறது கத்தார். அதோடு நம்முடைய மனிதவளம் அவர்களுக்கு மிகமிக அவசியம். அங்கிருக்கும் இந்தியர்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டால், கத்தாரில் பல துறைகள் முடங்கி விடும்.

எனவே கத்தார் முழுமையாக இந்தியாவை எதிர்க்காது என நம்பலாம். என்றாலும், கத்தாரின் இயல்பு, சர்வதேச அரசியல் சூழல் என இந்த பிரச்னை சிக்கலானதாயிருப்பதால் இந்தியா மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

கட்டுரையாளர்:
ஊடகவியலாளர்.

# அச்சப்படத் தேவையில்லை!

இந்தியாவில் எட்டு நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியிருக்கிறார் பூடான் அரசர் ஜிக்மே கேசர் நம்கியால் வாங்சுக். அஸ்ஸாமில் மூன்று நாள்களும், தில்லி, மும்பை உள்ளிட்ட நகரங்களில் பல முக்கியமான நிகழ்வுகளையும், சந்திப்புகளையும் மேற்கொண்ட பூடான் அரசரின் பயணம், இருநாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டுவிடாமல் தடுக்கும் முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. கடந்த மாதம் பூடான் வெளியுறவுத் துறை அமைச்சர் டாண்டி தோர்ஜியின் சீனப் பயணம் ஏற்படுத்திய மனக்கசப்பையும், சந்தேகத்தையும் அகற்றுவது பூடான் அரசரின் இந்தியப் பயணத்தின் பின்னணியாக இருக்கக்கூடும்.

பெரும்பாலான நாடுகளுடன் பூடானுக்கு தூதரக அளவிலான உறவு கிடையாது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைச் சார்ந்து பூடான் செயல்படுகிறது என்பதால், அதற்கான அவசியம் ஏற்படவில்லை. தூதரக உறவு இல்லாத நாடுகளில் ஒன்றான சீனாவுக்கு பூடானின் வெளியுறவுத் துறை அமைச்சர் பயணம் மேற்கொண்டதும், பல்வேறு நிலைகளில் பேச்சுவார்த்தை மேற்கொண்டதும் இந்தியாவை ஆச்சரியப்படுத்தியது.

கடந்த ஏழு ஆண்டுகளாக மேற்கொள்ளாத பூடான் – சீனா எல்லைப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இந்தியாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பூடான் – சீனா பேச்சுவார்த்தை அந்த இருநாட்டு உறவில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியதாக கூட்டறிக்கை தெரிவித்தது.

எல்லையை வரையறுக்க இருநாடுகளின் வல்லுநர் குழு செயல்படுவது குறித்து கூட்டுறவு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டது. விரைவிலேயே தூதரக அளவிலான ராஜாங்க உறவை ஏற்படுத்தவும், எல்லைப் பேச்சுவார்த்தையை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவரவும் பூடானுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யீ.

இந்தியாவுக்கும் பூடானுக்கும் இடையேயான நெருக்கமும், உறவும் தெரிந்தும்கூட, அந்த உறவில் பிரிவை ஏற்படுத்தும் முயற்சியை சீனா மேற்கொண்டது புதுதில்லிக்குத் தெரியாமல் இல்லை. வெளியுறவுத் துறை அமைச்சரின் சீன விஜயத்துக்கு சில வாரங்களுக்கு முன்னால், பூடான் பிரதமர் எல்லை பிரச்னையில் சீனாவுடன் விரைவில் தீர்வு ஏற்படும் என்றும், சீனாவுடனான தங்களது நாட்டின் நெருக்கம் எந்தவிதத்திலும் இந்தியாவை பாதிக்காது என்றும் தெரிவித்திருந்தார்.

தனது சுற்றுலா, வர்த்தகம், ஏற்றுமதி – இறக்குமதி உள்ளிட்ட எல்லா விஷயங்களிலும் இந்தியாவைச் சார்ந்திருக்கும் பூடான், இதுவரை இந்தியாவைக் கலந்தாலோசிக்காமல் எந்தவொரு முடிவையும் எடுத்ததில்லை. எல்லைப் பிரச்னையில் பூடான் எடுக்கும் எந்த முடிவிலும் இந்தியாவை இணைத்துக்கொள்வது அவசியம். இந்தியாவின் சிலிகுரி கணவாயை அடுத்த இந்தியா – சீனா – பூடான் முச்சந்தி பதற்றப் பகுதியாக நிலவும் சூழலில் தன்னிச்சையாக பூடானும் சீனாவும் எல்லைப் பிரச்னையில் முடிவுகாண முனைவது இந்தியாவின் நலனுக்கு எதிராக அமையும். அதனால், பூடானின் சீன நெருக்கம் இந்தியாவைக் கூர்ந்து கவனிக்க வைத்ததில் வியப்பில்லை.

பூடான் அரசர் வாங்சுக், இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்ததைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தியாவுக்கும் பூடானுக்கும் இடையே கோக்ராஜார் – ஜெலிஃபூ இடையே புதிய ரயில் வழித்தடம் தொடங்குவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்திருக்கிறது. அந்த ரயில் வழித்தடம் பூடானையும் அஸ்ஸாமையும் இணைக்கும் என்றால், மேற்கு வங்கத்துடன் இணைக்கும் இன்னொரு வழித்தடம் குறித்தும் பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கிறது.

மேற்கு வங்கம், வடகிழக்கு மாநிலங்கள் ஆகியவற்றை பூடானின் தெற்கு, கிழக்கு மாவட்டங்களுடன் இந்த ரயில் வழித்தடம் இணைப்பதால் அந்தப் பகுதிகளும் வடக்கு வங்கதேசமும் வளர்ச்சி அடையும். அஸ்ஸாமையொட்டிய பூடானின் தெற்குப் பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதும், ஜெலிஃபூவில் விமான நிலையம் அமைப்பதும் பூடானின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் சில முயற்சிகள். அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பும் முதலீடும் உறுதி அளிக்கப்பட்டுள்ளன.

பூடானின் 13-ஆவது ஐந்தாண்டு திட்டத்துக்கு இந்தியா பெருமளவில் உதவுகிறது. பூடான் – நேபாளம் ஆகிய இரண்டு நாடுகளிலும் நீர்மின் நிலையங்கள் இந்திய உதவியுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் உற்பத்தியாகும் மின்சாரம் வங்கதேசம், இலங்கை உள்ளிட்ட அண்டை நாடுகளுடனும் பகிர்ந்து கொள்ளப்படுவதால் தெற்காசியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். உலக வங்கியும் ஜப்பானும் இந்தியாவின் இந்த முயற்சிகளுக்கு முதலீடு வழங்க ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்திலுமே சீனா தடம் பதித்துக்கொண்டிருக்கிறது என்பது உண்மை. தனது முதலீடுகளால் மட்டுமல்லாமல், கடனுதவியாலும் அந்த நாடுகளை ஈர்க்கிறது. பாகிஸ்தான் மட்டுமல்லாமல் மாலத்தீவு, இலங்கை, வங்கதேசம், நேபாளம், இப்போது பூடான் என்று சீனா தனது நெருக்கத்தை அதிகரித்துக் கொண்டிருப்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில், இந்த நாடுகள் அனைத்துமே சீனாவின் கடன் வலையில் சிக்கிக்கொள்ளும் பேராபத்தை உணரத் தொடங்கியிருக்கின்றன.

மாறிவிட்ட உலக சூழலில் எந்தவொரு நாடும், எந்தவொரு நாட்டையும் சார்ந்திருப்பது சாத்தியமல்ல. ஒன்றோடொன்று மோதலில் இருக்கும் அமெரிக்காவுடனும் ரஷியாவுடனும் இந்தியா உறவு வைத்துக்கொள்வது போல, நமது அண்டை நாடுகளும் இந்தியாவுடனும் சீனாவுடனும் உறவு வைத்துக்கொள்கின்றன என்றுதான் நாம் பார்க்க வேண்டும்!

# அதிகரிக்கும் டைபாய்டு பாதிப்பு: மருத்துவர்கள் எச்சரிக்கை

**சென்னை, நவ.10:** கடந்த சில நாள்களாக சென்னையில் டைபாய்டு காய்ச்சலால் பாதிக்கப்படும் பள்ளி குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். காய்ச்சலுடன் மருத்துவமனைகளை நாடும் குழந்தைகளில் 30 சதவீதம் பேருக்கு டைபாய்டு பாதிப்பு இருப்பது பரிசோதனையில் உறுதிசெய்யப்படுவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சால்மோனெல்லா டைஃபி எனப்படும் பாக்டீரியா கிருமி உடலில் பரவும்போது டைபாய்டு பாதிப்பு ஏற்படுகிறது. தரமற்ற குடிநீர், சுகாதாரமற்ற உணவு மூலம் இந்நோய் பரவுகிறது. குடல் பகுதியில் பாதிப்பை இந்த வகை பாக்டீரியாக்கள் ஏற்படுத்தும் என்றாலும் நாளடைவில், அதன் தீவிரத்தைப் பொருத்து கல்லீரல், இரைப்பை, பித்தப்பை, சிறுநீரகம், நுரையீரலில் கடுமையான சேதத்தை அந்நோய் ஏற்படுத்தும்.

தமிழகத்தைப் பொருத்தவரை மே மற்றும் ஜூன் மாதங்களில் டைபாய்டு பாதிப்பு அதிகமாக இருக்கும். பின்னர் செப்டம்பரில் அதன் தாக்கம் குறைந்து டெங்கு போன்ற பிற வகையான காய்ச்சல் பரவும். ஆனால், நிகழாண்டில் மழை பாதிப்பு பரவலாக இருப்பதால், தற்போது டைபாய்டு காய்ச்சல் அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து குழந்தைகள் நலன் முதுநிலை மருத்துவ நிபுணர் வி.வில்வநாதன் கூறியதாவது:

கடந்த சில மாதங்களாக டெங்கு, இன்ஃப்ளூயன்ஸா காய்ச்சல் தாக்கம் குழந்தைகளிடையே அதிகமாக உள்ளது. சில வாரங்களாக அதனுடன் டைபாய்டு பாதிப்பும் காணப்படுகிறது. காய்ச்சலுடன் வரும் 10-இல் 3 குழந்தைகளுக்கு டைபாய்டு காய்ச்சல் அல்லது அதனுடன் தொடர்புடைய காய்ச்சல் இருக்கிறது.

தரமற்ற குடிநீர் விநியோகம் உள்ள பகுதிகளில் அத்தகைய பாதிப்பு இன்னமும் அதிகமாக உள்ளதாக மருத்துவத் தரவுகள் தெரிவிக்கின்றன. சால்மோனெல்லா டைஃபி பாக்டீரியா வகையைச் சேர்ந்த பாராட்டிஃபி கிருமிகளும் டைபாய்டை ஒத்த பாராடைபாய்டு காய்ச்சலை உருவாக்கி வருகின்றன.

இதைத் தவிர்க்க தனி நபர் சுகாதாரம் மிக முக்கியம். வெளி உணவுகளைத் தவிர்ப்பதும், குறிப்பாக காய்ச்சிய நீரை மட்டுமே பருகுவதும் அவசியம். கைகளை நன்கு கழுவும் பழக்கத்தை குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டும். அதேபோன்று டைபாய்டு தடுப்பூசிகளை முறையாகச் செலுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்கு முன்பு வரை, குழந்தைகள் பிறந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே டைபாய்டு தடுப்பூசிகள் போடப்பட்டு வந்தன. தற்போது அவை 6 மாதங்களிலேயே வழங்கப்படுகின்றன. இதுவரை தடுப்பூசி செலுத்தாவிடிலும், குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் சிறப்பு தவணையாக அதனை செலுத்திக் கொள்ள வேண்டும்.

தடுப்பூசி செலுத்துவதால் மட்டுமே டைபாய்டு வராமல் முழுமையாக தடுக்க இயலாது. அதே வேளையில் அதன் வீரியத்தை குறைத்து நலமுடன் வாழலாம் என்றார் அவர்.

### டைபாய்டு அறிகுறிகள்...



- உடல் சோர்வு
- கடுமையான காய்ச்சல்
- பசியின்மை
- தலைவலி
- வயிற்றுப்போக்கு
- வாந்தி
- மயக்கம்
- தொண்டை வலி
- உடலில் தடிப்புகள்
- வயிற்று உபாதைகள்

### காரணங்கள்....

- சுகாதாரமற்ற உணவு
- பாதுகாப்பற்ற குடிநீர்
- சுகாதாரமற்ற வாழ்க்கைச் சூழல்
- கைகளை சுத்தமாக பராமரிக்காமை
- பாதிக்கப்பட்டவர்களின் கழிவுகளைத் தொடுதல்

### பரிசோதனைகள்....

- சால்மோனெல்லா டைஃபிக்கு எதிரான எதிர்ப்பாற்றல் பரிசோதனை
- காய்ச்சல் பரிசோதனைகள்
- ரத்தம், மலம் மற்றும் சிறுநீர் மாதிரி பரிசோதனை
- எலும்பு மஜ்ஜை சோதனை
- ரத்தத்தில் கிருமி வளர்ச்சி பரிசோதனை

### குடிநீர் தரத்தை உறுதி செய்ய நடவடிக்கை

டைபாய்டு பரவல் குறித்து பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் கூறியது:

தமிழகத்தில் அடுத்த இரு மாதங்களுக்கு டெங்கு, மலேரியா, டைபாய்டு, இன்புளூயன்ஸா பாதிப்புகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. டைபாய்டு பாதிப்பில் இருந்து தற்காத்துக் கொள்ள குடிநீரை நன்றாக கொதிக்க வைத்து பருக வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள் வாயிலாக விநியோகிக்கப்படும் குடிநீரில் குளோரின் அளவை உறுதி செய்ய அறிவுறுத்தி உள்ளோம். சுற்றுப்புறங்களைத் தூய்மையாக பராமரித்தல், குடிநீரை கொதிக்க வைத்து குடித்தல், காய்ச்சல் வந்தால் சுய மருத்துவம் பார்க்காமல் மருத்துவர்களிடம் சிகிச்சை பெறுதல் ஆகியவை பொதுமக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளாகும் என்றார் அவர்.

# இந்தியா–அமெரிக்கா கூட்டுத் தயாரிப்பில் ராணுவ கவச வாகனம்

## 2+2 பேச்சுவார்த்தையில் அமெரிக்க அமைச்சர் தகவல்

**புதுதில்லி,நவ.10:** இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்து ராணுவ கவச வாகனத்தை தயாரிக்க பணியாற்றி வருவதாக 2+2 அமைச்சர்கள் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் தெரிவித்தார்.

தில்லியில் இந்தியா, அமெரிக்கா இடையே 2+2 பேச்சுவார்த்தை வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆகியோர் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

**வெளியுறவு அமைச்சர்கள்...:** இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஜெய்சங்கர் பேசியதாவது:

இந்தியா-அமெரிக்கா இடையிலான வர்த்தக மதிப்பு 200 பில்லியன் டாலரை (சுமார் ரூ.16.65 லட்சம் கோடி) கடந்துள்ளது. முக்கிய தொழில்நுட்பங்கள், முக்கிய கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகள் ஒத்துழைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகிறது என்றார்.

அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் பேசுகையில், 'சர்வதேச அமைதி, பாதுகாப்பு உள்ளிட்டவற்றில் இரு நாடுகளின் கூட்டுறவை வலுப்படுத்தவும், இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு, சுதந்திரம் ஆகிய கொள்கைகளை நிலைநிறுத்தவும் இந்தியாவும் அமெரிக்காவும் பணியாற்றுகின்றன. தடையற்ற, வளமிக்க, பாதுகாப்பு உள்ள பொதுவான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை இருநாடுகளும் ஊக்குவிக்கின்றன' என்றார்.

**பாதுகாப்பு அமைச்சர்கள்...:** அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறுகையில், 'இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவில் பாதுகாப்புத் துறை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த தூணாக நீடிக்கிறது. திறன் வளர்ப்புக்குப் பாதுகாப்புத் துறையின் பல்வேறு தளங்களில் அமெரிக்காவுடன் நெருங்கிப் பணியாற்ற இந்தியா ஆவலாக உள்ளது' என்றார்.

அமைச்சர் லாயிட் ஆஸ்டின் பேசுகையில், 'இந்தியா, அமெரிக்கா தொழிற்தளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, இருநாட்டு ராணுவமும் இணைந்து செயல்படுவது வலுப்படுத்தப்பட்டு வருகிறது. அதிநவீன தொழில்நுட்பங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன' என்றார்.

**ராணுவ கவச வாகனம் கூட்டுத் தயாரிப்பு:** கூட்டத்தைத்தொடர்ந்து அமைச்சர் லாயிட் ஆஸ்டின் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

2+2 பேச்சுவார்த்தையில் பல்வேறு நாடுகளின் பாதுகாப்புக்கு சீனாவால் அதிகரித்து வரும் சவால்கள் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது. ராணுவ கவச வாகனத்தை இணைந்து தயாரிக்க இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றிணைந்து பணியாற்றி வருகின்றன. அமெரிக்காவிடம் இருந்து 31 எம்க்யூ-9பி ட்ரோன்களை (ஆளில்லா விமானங்கள்) இந்தியா கொள்முதல் செய்வது குறித்து உரிய நேரத்தில் அறிவிப்பு வெளியிடப்படும். அந்த ட்ரோன்கள் இந்தியாவுக்கு விரைந்து கிடைப்பதற்கு அமெரிக்க அரசு அதிகாரிகள் ஆவன செய்து வருகின்றனர். முன்னெப்போதையும்விட தற்போது இந்தியா-அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்பு வலுவாக உள்ளது என்று தெரிவித்தார்.

2+2 பேச்சுவார்த்தைக்கு முன்னதாக பிளிங்கனை ஜெய்சங்கர் சந்தித்து, மேற்கு ஆசியாவில் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் மோதல் மற்றும் பிற பிராந்திய விவகாரங்கள் குறித்துப் பேசினார்.

**இந்தியா–அமெரிக்கா கூட்டறிக்கை:** பேச்சுவார்த்தை குறித்து இரு நாடுகளும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த 2008-ஆம் ஆண்டு மும்பையிலும், கடந்த 2016-ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் பதான்கோட்டில் உள்ள இந்திய விமானப் படைத் தளத்திலும் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இருநாட்டு அமைச்சர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அந்தத் தாக்குதல்களுக்குக் காரணமான குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அல்-காய்தா, ஐஎஸ், லஷ்கர்-ஏ-தொய்பா, ஜெய்ஷ்-ஏ-முகமது போன்ற பயங்கரவாத அமைப்புகளுடன் இணைந்துள்ள குழுக்களின் அனைத்து பயங்கரவாதிகள் மீதும் ஒன்றுசேர்ந்து திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத பணப் பரிவர்த்தனை, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி ஆகியவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளில் சர்வதேச தரத்தை நிலைநிறுத்துவது முக்கியம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**பாதுகாப்புத் துறையில்...:** பாதுகாப்புத் துறை தொடர்பாக பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டவை குறித்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், 'இந்தியா-அமெரிக்கா படைகள் இடையே தடையற்ற தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை எளிதாக்கும் தொடர்புநிலைகளை இருதரப்பும் அமைத்து வருகிறது.

இந்தியாவின் திறன்களை வலுப்படுத்துவதற்கும், தொழில்நுட்ப பகிர்வை எளிதாக்குவதற்கும், 'பாதுகாப்பு-தொழில்துறை ஒத்துழைப்புக்கான வழிமுறைகளை' அமைச்சர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர். அமெரிக்காவின் ஜெனரல் எலக்ட்ரிக் ஏரோஸ்பேஸ் மற்றும் இந்தியாவின் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு இடையே ஜிஇ எஃப்-414 ஜெட் என்ஜின்களை இந்தியாவில் தயாரிப்பதற்கான வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையை அமைச்சர்கள் பாராட்டினர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நிஜ்ஜார் கொலை விவகாரம்: இந்தியா–கனடா இணைந்து தீர்வு காண பிளிங்கன் வலியுறுத்தல்:** கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட சம்பவத்தில் இந்தியா - கனடா இணைந்து செயல்பட்டு தீர்வு காண வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் வலியுறுத்தினார்.

இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் பிளிங்கன் கூறுகையில், 'நிஜ்ஜார் கொலை வழக்கில் கனடா நடத்தும் விசாரணைக்கு இந்தியா ஒத்துழைப்பு அளித்து தீர்வு காண வேண்டும். இதுகுறித்து இந்தியாவுடன் ஆலோசித்தேன்' என்றார்.

முன்னதாக, இந்தியா தனது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக பிளிங்கனிடம் எடுத்துரைத்தது.

## பிரதமருடன் சந்திப்பு

**புது தில்லி, நவ. 10:** அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயிட் ஆஸ்டின் ஆகியோர் பிரதமர் நரேந்திர மோடியை வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினர்.

இந்திய-அமெரிக்க பாதுகாப்பு மற்றும் வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையேயான '2+2' பேச்சுவார்த்தை தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, அமெரிக்க அமைச்சர்கள் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து கலந்துரையாடினர். இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

சந்திப்பு குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அமெரிக்க அமைச்சர்கள் லாயிட் ஆஸ்டின், ஆன்டனி பிளிங்கனை வரவேற்றதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். இந்தியா-அமெரிக்கா இடையிலான சர்வதேச உத்தி ரீதியிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இரு நாட்டு அமைச்சர்களுக்கு இடையிலான '2+2' பேச்சுவார்த்தை முக்கியப் பங்கு வகிக்கும்.

ஜனநாயகம், பன்முகத்தன்மை, சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றில் நமது இரு நாடுகளின் பகிரப்படும் நம்பிக்கை பல்வேறு துறைகளில் பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுகிறது. உலக நன்மைக்கு இந்தியா-அமெரிக்கா இடையிலான உறவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது' எனக் குறிப்பிட்டிருந்தார்.



பிரதமர் மோடியை சந்தித்த (இடமிருந்து) லாயிட் ஆஸ்டின், ஆன்டனி பிளிங்கன், ராஜ்நாத் சிங், எஸ்.ஜெய்சங்கர்.